# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

CASE NO.SC.258/2017
Deposition of P.W.1- Viju
Dated:3.8.2022

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**-

சம்பவத்தன்று நான் கண்ணனூரில் வசித்து வந்தேன். நான் திருநெல்வேலி சென்றேன் என்பதற்கு எவ்வித ஆவணமும் காவல் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. அதே போன்று திருநெல்வேலியில் இருந்து சாமியா ர்மடம் பஸ் ஸ்டாப்பில் வந்து இறங்கியதற்கு எவ்வித ஆவணமும் காவல் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என் கைவசமும் ஆவணம் கிடையாது. நாகர்கோவிலில் இருந்து கா ட்டாத்துறை வழியாக கண்ணனூர் செல்வது தான் தூரம் குறைவான பாதை ஆகும். நாகர்கோவிலில் இருந்து அழகிய மண்டபம் வந்து அதன் பிறகு கண்ணனூர் செல்வது தூரம் அதிகமான பாதை ஆகும். திருநெல்வேலியில் இருந்து கண்ணனூர் செல்வதற்கு சாமியார்மடம் வரவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரிதான். சாமியார்மடம் பஸ் ஸ்டாண்டில் நான் இறங்கியதாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததா நான் கூறும் இடம் 3 ஸ்டார் ஹோட்டலுக்குள் என்பதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சாமியார் மடம் ஜங்ஷன் என்பது பெரிய ஜங்ஷன் ஆகும். அங்கு நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது. ஆட்கள் நடமாட்டம் எப்போதும் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஜங்ஷனில் ஆட்டோ ஸ்டாண்ட் , சந்தை, கார் ஸ்டாண்ட் உள்ளது. மேற்படி சாமியார் மடம் ஜங்ஷன் எப்போதும் பரபரப்பாக இருக்கக்கூடிய ஒரு பகுதி என்றால் சரிதான். நடந்ததாக கூறப்படும் சம்பவ இடத்தில் இருந்து 10 அடி தூரத்தில் விஜயகுமார் மருத்துவமனை என்று ஒரு மருத்துவமனை உள்ளது. நடந்ததாக கூறப்படும் சம்பவ இடத்தில் இருந்து 1 கி.மீ கிழக்கே இரத்தினா மருத்துவமனை உள்ளது. எனக்கு வேறு எங்கோ ஒரு இடத்தில் , வேறு ஏதோ ஒரு விதத்தில் காயம் ஏற்பட்டது என்றும் எனவே தான் நான் மேற்படி இரத்தினா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நடந்ததாக கூறப்படும் சம்பவத்தின் போது என்னுடன் யாரெல்லாம் வந்தார்கள் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என்னை காயம்பட்ட பிறகு ஒருவர் மருத்துவமனையில் கொண்டு சிகிச்சைக்காக சேர்த்தார். அவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் எதிரிகள் மூவரும் ரூபாய்

ஐம்பதாயிரம் செலவானது என்று தகராறு செய்ததாகவும் , 1ம் எதிரி ஆல்பர்ட் நீ செத்து தொலைந்து போ என்று வெட்டுகத்தியால் என்னை வெட்ட வந்தார் என்றும் நான் தடுத்தால் வெட்டு கத்தி கீழே விழுந்தது என்றும், 1ம் எதிரி ஆல்பர்ட்டும் 3ம் எதிரி முருகனும் என்னை இறுக்க பிடித்துக்கொண்டார்கள் என்றும், இவனை கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுகத்தி எடுத்து முன்பக்க தலையில் வெட்டினார் என்றும், நான் நிலை தடு மாறி கீழே விழுந்தேன் என்றும், எனது கழுத்தில் கிடந்த 2 பவுன் செயின் தங்க செயினை 1ம் எதிரி ஆல்பர்ட் பிடுங்கி சென்று கேஸ் செலவிற்கு ஆகும் என்று சொல்லி கொண்டு சென்றார் என்றும், இந்நீதிமன்றத்தில் கூறிய சாட்சியமானது நடந்த உண்மை சம்பவமா அல்லது போலீசார் இவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் கூறியதா என்றால் போலீசார் இவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் நான் அளித்த சாட்சியம் ஆகும். புகார் வாக்குமூலம் போலீசார் கூறியதன் அடிப்படையில் கொடுத்தேன் என்றால் சரிதான்.

# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

CASE NO.SC.258/2017
Deposition of P.W.2- ஜஸ்டஸ்
Dated:3.8.2022

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

நடந்ததாக கூறப்படும் வழக்கு சம்பவத்தின் போது நான் சித்திரங்கோட்டில் வசித்து வந்தேன். நான் திருநெல்வேலி சென்றதற்கு ஆவணம் கிடையாது. நான் திருநெல்வேலியில் இருந்து சித்திரங்கோடு செல்வதற்கு நாகர்கோவில் வந்து பின்னர் தக்கலை வந்து செல்ல வேண்டும். நான் திருநெல்வேலியில் இருந்து சித்திரங்கோடு செல்வதற்கு சாமியார்மடம் செல்ல அவசியம் கிடையாது. 23.8.2012 அன்று நான் சாமியார்மடம் சென்றதாக கூறுவது தவறு என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணையின் போது எதிரிகள் மூவரும் ரூபாய் ஐம்பதாயிரம் செலவானது என்று அ.சா.1 டம் தகராறு செய்ததாகவும், 1ம் எதிரி ஆல்பர்ட் அ.சா.1 ஐ செத்து தொலைந்து போ என்று வெட்டுகத்தியால் அ.சா.1 ஐ வெட்ட வந்தார் என்றும் அ.சா.1 தடுத்தால் வெட்டு கத்தி கீழே விழுந்தது என்றும், 1ம் எதிரி ஆல்பர்ட்டும் 3ம் எதிரி முருகனும் அ.சா.1 ஐ இறுக்க பிடித்துக்கொண்டார்கள் என்றும், அ.சா.1 ஐ கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுகத்தி எடுத்து முன்பக்க தலையில் வெட்டினார் என்றும், அ.சா.1 நிலை தடு மாறி கீழே விழுந்தேன் என்றும், அ.சா.1 கழுத்தில் கிடந்த 2 பவுன் செயின் தங்க செயினை 1ம் எதிரி ஆல்பர்ட் பிடுங்கி சென்று கேஸ் செலவிற்கு ஆகும் என்று சொல்லி கொண்டு சென்றார் என்றும், இந்நீதிமன்றத்தில் கூறிய சாட்சியமானது நடந்த உண்மை சம்பவமா அல்லது போலீசார் இவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் கூறியதா என்றால் போலீசார் இவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் நான் அளித்த சாட்சியம் ஆகும். நான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.